எதிர்ப்புகளுக்கஞ்சி, இலகுவில் செல்வாக்கையோ, இலக்கையோ அடையலாமென்ற எண்ணத்தில் கொள்கையை மாற்றுவது கேலியாகும். அதே நேரத்தில் மக்கள் விருப்பையும் தள்ளி விடலாகாது. சமஷ்டி ஆட்சி வேண்டுமென்ற எண்ணத்தில் ஆதரவளித்தார்களா? இன்று அவர்கள் எண்ணம் என்ன? இலக்கென்ன? என்ற ஆராய்ச்சியும் த. அ. க. வுக்கு வேண்டும். ஆராய்வுடனும் ஞானத்துடனும் நடந்து கொள்ளும் பொறுப்பு த. அ. கட்சிக்குண்டு; தேசிய அரசுக்குமுண்டு.

சுகாதார வாரம்

கடந்த செவ்வாய் முதல் இலங்கையில் சுகாதார வாரம் அனுட்டிக்கப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக ஆண்டுதோறும் நடைபெற்று வரும் ஒரு சாதாரண நிகழ்ச்சி. பிரதம சுகாதார ஆலோசகர் ஒருவர் பாடசாலைகளினுதவியுடன் தம் பகுதியில் சுகாதார விதிகளையோ, தொற்று நோய்த் தடுப்பையோ, போஷாக்குள்ள உணவுபற்றியோ ஒரு வார காலத்துக்குப் பாடல்கள், பேச்சுகள், நடித்தல்கள், பொருட்காட்சிகள் மூலம் வற்புறுத்திவருவது வழக்கம். இவ்வாண்டு சுகாதார ஆலோசகர்கள் பங்கெடுப்பதாய் இல்லைப்போல் தெரிகிறது. எனினும் சுகாதார வாரம் நடைபெறுகிறது.

வருடத்திலொருமுறை சுகாதார உணர்வு மக்களிடையே மாணவர் மூலம் பரப்பப்பட்டுவருகிறது. பலன் எவ்வளவுவென்று மட்டிடமுடியாது. பெருவிலும் நோய்களும் இடமில்லாமற் போகும் வைத்தியசாலைகளும் நம் நாட்டில் சுகாதாரம் திருப்தியான நிலையில் இருப்பதாகச் சொல்ல இடமில்லை. ஆனாலும் மக்களிடையே உணவில், உடையில், உறைவிடத்தில் சுகாதார உணர்வு வளர்க்கப்பட்டுள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

சுகாதார அறிவு வளர்ந்தாலும் நடைமுறையில் கடைப்பிடிக்கும் வழக்கம் வளர்ந்துள்ளதென்பதற்கில்லை. கொதித்தாறிய நீரைப் பருகுவோரும், கண்ட கண்ட இடங்களிலெல்லாம் துப்பியோ, மலசலங்கழித்தோ அசிப் படுத்தாதோரும், போஷாக்குள்ள உணவுண்பாரும், தொற்று நோய் கண்டால் மறைக்காது உடனுக்குடன் சிகிச்சை பெறுவாரும் மிகச் சிலரேயெனலாம். கேட்பன, காண்பனவெல்லாம் சுகாதார வாரத்தோடு மறைந்து மறக்கப்பட்டுப் போவதாலேயே அப்படியாகிறது.

பாடசாலை மாணவர் மாத்திரமன்றிப் பொதுமக்களும் வார நிகழ்ச்சிகளில் கரிசனை கொண்டு, வாரத்தில் கண்டவைகள் கேட்டவைகளை அனுட்டானத்தில் கொண்டுவந்தாலன்றி வார நோக்கம் நிறைவாகாது. சுகாதார வாரத்தில் உண்டிச்சாலைகள், வீடுகள், எவ்வளவு சுத்தமாகவிருக்கின்றன. தொடர்ந்து அப்படி இருக்கின்றனவெனச் சொல்லமுடியாது. தொடர்ந்து இருக்க வகை பிறக்கச் செய்வதே இன்றைய தேவை. சுகாதார அறிவு போதியளவு வளர்ந்து விட்டது. பழக்கத்தில் கொண்டுவர மக்களின் ஒத்துழைப்பே வேண்டியது.

நோய் பரவாமல் தடுப்பதற்கு, நோயில்லாமல் வாழ்வதற்கு மக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தாலன்றிச் சுகாதார வாரம் அதிக பயன் தராது. பல நல்ல விஷயங்கள் மக்களின் கவனத்தைப் பெறுவது குறைவு. சகவாழ்வுமப்படியே. நம்நாட்டில் அது சாதாரணம்.

மலேரியா திரும்பவும் நாட்டை கலிய வைக்கிறது. நுளம்பு பரவாமல் தடுக்கும் முறை தெரியாததல்ல. மாற்று மருந்தும் அறியாததல்ல; ஆனால் மலேரியா பரவிக் கொண்டேயிருப்பதாய்த் தெரிகிறது. அரசாங்கமும் தடுப்பதற்குத் தீவிரமாய் ஈடுபடுகிறது. அரசாங்க முயற்சியில் மக்கள் ஒத்துழைப்புப் போதியளவு இருந்தாலன்றிப் பயன் விரைவில் கிட்டாது.

சுகாதார பழக்கங்கள் நாடெங்கும் நடைமுறையில் கைக் கொள்ளப்பட ஏற்றவகையில் இச்சுகாதார வாரம் பயன்படட்டும். சுகவாழ்வுக்கு வேண்டியவைகளை நாளாந்தம் தேடிக்கொள்ள வகைசெய்வோம் என இவ்வேளையில் [illegible] வாரம் [illegible]

ஈழத் தமிழ் மக்களினது நெற்பயிர்ச் செய்கை முறை ....

க. அருமைநாயகம் B. A. (Hons.) Cey.

(சென்றவாரத் தொடர்)

வாரக் குடிகள்

நெற்செய்கை, பெரிய வயல்களில் வாரக்குடிகள் என்ற விவசாயத் தொழிலாளர் உதவியுடனேயே நடைபெற்றது. ஈழத் தமிழ் மக்களிடையே நிலவிய தொழிலாளர் வர்க்கப் பிரிவில் வாரக் குடிகள் குறிப்பிடக்கூடியவராவர். வெள்ளாளனது வாழ்க்கைக்கு "குடிமக்களும்" "வாரக் குடிகளும்" இன்றியமையாதோராவர். குடிமக்களுக்கும் வாரக் குடிகளுக்கும் பல வேறுபாடுகள் உண்டு. குடிமக்கள் என்போர் பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களாகவும், வெள்ளாளன் வீட்டில் அல்லது உயர் சாதியினர் வீட்டில் குடிமைத் தொழில் செய்வோராயுமிருப்பர். இவர்கள் தமிழ்மக்களிடையே நிலவிய சாதியமைப்பின் முறையால் - பிறப்பால்-குடிமைத் தொழில் செய்ய வேண்டிய நிலையிலிருந்தனர். ஆனால் வாரக் குடிகளென்போர் குறிப்பிட்ட ஒரு சாதியைச் சேர்ந்தவரல்லர். தனிப்பட்ட முறையில் முதலிட்டுத் தொழில் நடத்த முடியாதவர்கள் பெரிய கமக்காரனை ஒருவனை அணுகி அவனுடன் ஒப்பந்தம் செய்து நெற் செய்கைக்கு வேண்டிய தொழிலுதவிகளைச் செய்வார்கள். வேலி போடுதல், காவல் செய்தல், விதைத்தல், பொலிபடித்தல் போன்றவை அவர்கள் செய்த வேலைகளிற் சிலவாகும், இவ்வொப்பந்தம் பெரும்பாலும் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கெனவேஎழுதப்படும் ஆனால், பெரும்பாலும் ஆயுட்காலமாக மாத்திரமன்றிச் சந்ததி சந்ததியாகவும் குடிமைத்தொழில் செய்யவேண்டிய நிலையையும் ஏற்படுத்தியது. வாரக்குடி என்பதனுல் பிறரில் தங்கியிருக்க வேண்டியவர் என்ற நிலைமைத் தவிர, கீழ் சாதியினர் பெற்றிருந்த தரக் குறைவு வாரக்குடிகளுக்கு இருக்கவில்லை.

வாரக் குடியாக ஒப்பந்தஞ் செய்புமொருவன் தனது அன்றாட சீவியத்துக்குத் தேவையான உணவு, பணம், உடை, ஆகியவற்றைக் கடனுகக் கமக்காரனிடமிருந்து பெற்றுக்கொள்வான். இவையின் அளவு மாதத்துக்கு மாதம் வேறுபட்டன. இவைகள் தேவைக்கேற்றவாறு மாதம் மாதமாகவோ அல்லது கேட்ட நேரத்திலோ கொடுக்கப்பட்டன. பெரும்பாலும் வாரக்குடிகள் எழுத்தறிவில்லாதவர்களான காரணத்தினுல் கடன் பற்றிய கணக்கு விபரங்களைக் கமக்காரனே குறித்து வைத்துக்கொள்வான். இக்கடன் பொலிபடிக்கும் காலத்தில் தீர்க்கப்படல் வேண்டும். பொதுவாக நெல்விளைச்சலில், விதைநெல்லும், அரசாங்கத்துக்குரிய வரி நெல்லும் போக மிகுதியாகவிருக்கும் நெல் பங்கிடப்பட்டது. குரக்கன், வரகு, இறுங்கு போன்றவைகளில் மூன்றில் இரண்டு கமக்காரனுக்குப் போக எஞ்சியதையே தமது பங்காக வாரக்குடிகள் பெற்றுக் கொண்டனர். அப்பங்கும் முன்னர்க் கொடுத்த கடனுக்குரியதைக் கழித்தெடுத்ததின் பின்னரே கொடுக்கப்பட்டது. வாரக்குடிகள் கடன்பற்றிச் சரியாக மதிப்பீடு செய்து வைத்துக்கொள்ளாமையினுல், கமக்காரனது தயவிலும், கருணையிலும் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் விளைச்சல் போதியளவு இல்லாவிட்டால் முன் கொடுக்கப்பட்ட கடனுதவி அடுத்த ஆண்டுக் கணக்கில் பதியப்பட்டு அது தீர்க்கப்படும் வரை இழுத்துச் செல்லப்பட்டது. தந்தையின் கடனுக்கு மகன் பொறுப்பு என்ற வழக்கம் தமிழ் மக்களிடையே நிலவியதால் பல சந்ததிகள் இதனுல் தொடர்ந்து வாரக்குடிகளாக இருக்க வேண்டிய நிலையேற்பட்டது. தந்தையினது கடனை மகன் திருப்பிக் கொடுக்க மறுத்தால் மகன்மீது வழக்குத் தொடரும் உரிமை கமக்காரனுக்கிருந்தது.

வாரக்குடிகளது சேவை நிபந்தனைகள் பத்திரத்தில் குறிக்கப்பட்டு அதனை ஏற்றுக்கொள்வதாக வாரக்குடிகள் கையெழுத்து அல்லது விரலடையாளமிட்டதால் அது ஒப்பந்தப் பத்திரமாகவும், அதனை மீறுவது சட்டத்திற்கு முரணுனது என்ற கருத்தும் நிலவியது. வருடம் முழுவதும் வாரக்குடிகளுக்கு வேலையிருப்பதில்லை. நெற்பயிருக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யுங் காலத்திலும் அறுவடைக்காலத்திலுமே முழுநேர வேலையுண்டு. ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் காடுகள் வெட்டப்பட்டுச் சிறுதானியங்கள் பயிரிடவும் நெற் செய்கைக்காக நிலத்தைப் பண்படுத்தவும் வேலையிருக்கும்; ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி மாதங்களில் குளங்களை அண்மித்திருக்கும் நிலங்களில் பயிர்ச் செய்கை நடைபெறும்; பங்குனி, சித்திரையில் அறுவடையும் சேமிப்பும் நடைபெறும். இதனுல் மேற்குறிப்பிட்ட மாதங்களில் வாரக்குடிகள் கமக்காரனை விட்டு நீங்குவதும், வேலை செய்ய வரத்தவறுவதும் சட்டவிரோதமாகவும், ஒப்பந்தத்தை மீறுவதாகவும் கருதப்பட்டன. வயலில் வேலையிருக்கும்பொழுது வாரக்குடிகள் வேட்டைக்குச் செல்வதும், சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதும் கமக்காரர்களிடையே எரிச்சலைக் கிளப்பியது

கமக்காரன் வாரக்குடியைப் பராமரிக்க முடியாத வறுமை நிலையடைந்தால் வாரக்குடிகள் கமக்காரனை விட்டு நீங்கலாம். ஆனுல் அப்படி நீங்குவதற்கு முன்னர் யாராவது ஒரு பொறுப்புள்ள அதிகாரியிடம் அறிவித்தல்வேண்டும். வாரக்குடிகளுக்குச் சுகவீனம் ஏற்படுங்காலங்களில் அவர்களைப் பராமரிக்கும் பொறுப்புக் கமக்காரனைச் சாரும். வாரக்குடியொருவன் கமக்காரனைவிட்டு நீங்கவேண்டுமானுல் தனது கடன் முழுவதையும் தீர்க்க வேண்டும்; அல்லது புதிதாக இன்னெருவருடைய வாரக்குடியாகச் செல்ல நினைப்பின் புதிய கமக்காரனைத் தனது கடனைத் தீர்க்கும்படி செய்தல் வேண்டும். வாரக்குடிகளிற் சிலர் தமது சொந்தமாக மாடுகள் வைத்திருந்தனர். வயல்களில் வேலை செய்வதற்கு அவைகளை வாடைக்குவிட்டனர். ஆனுல் தமது விருப்பப்படி தானியப் பயிர்ச் செய்கையில் வாரக்குடிகள் ஈடுபட முடியாத நிலையிலிருந்தனர். அப்பயிர்ச் செய்கை அவர்களது கடமைக்கு முரணுனதாகும். வாரக்குடிகள் பெரும்பாலும் வேறு சாதியினரல்லாத காரணத்தினுல் கடன்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் கமக்காரனது குடும்பங்களிலேயே விவாகஞ் செய்தனர்.

வடமாகாணத்தில் விவசாயத்தில் ஈடுபட்டோர் மத்தியிலன்றி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டோரிடையேயும் இத்தகைய வாரக்குடி முறை காணப்பட்டது.

வாரக்குடி நல்லமுறையில் இயங்கியிருப்பின் அதுஒரு சிறந்த முறையாக அமைந்திருக்கும். ஏனெனில் ஒரு தொழிலாளியை வேலையில் ஈடுபடுத்தும்பொழுது, அத்தொழிலில் வரும் வருமானத்தில் அவனுக்கும் பங்குண்டு என்றநிலை அவனை உற்சாகமாகவும், சிரத்தையுடனும் வேலையில் [illegible] வாரக் [illegible] உற்சாகமளிப்பதாகக் காணப்படவில்லை. வன்னிபோன்றபிரதேசங்களில் மழையை நம்பியிருக்க வேண்டிய நிலையில் — எல்லா அறுவடையும் நல்ல விளைச்சலைத் தருமென நம்பியிருக்க முடியாதிருந்தது. இரண்டாவதாக, குறிப்பிட்ட காலத்தில் விளைச்சல் குன்றினுல் கமக்காரனிலும் பார்க்கப் பாதிக்கப்படுவன் வாரக்குடியாவான். ஏனெனில் தான் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமலும், கமக்காரனிடமிருந்தும் பிரிந்து செல்லமுடியாதபடியும், தடை ஏற்படும். மேலும் வாரக்குடிகளைத் தம்முடன் வைத்திருப்பதற்காகக் கமக்காரர் விளைச்சல் முழுவதையும் உடனடியாகப் பொலிபடிக்காது தாமதப் படுத்தினர்.

மீன் பிடிப்போர் மத்தியிலும் நிலவும் இம்முறையில் தலைவனும் கமக்காரனெனவே அழைக்கப் பட்டான். இங்கு இரண்டுமூன்று வருடங்களுக்கு மேல் ஒருவன் வாரக்குடியாக இருப்பது கிடையாது. கமக்காரனது கெட்டகைகளிலேயே மீன்பிடிக்கும் வாரக்குடி தங்குதல் வேண்டும்.

கிறிஸ்தவ அன்பு

நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து தமது மலைப் பொழிவில் கிறிஸ்தவ அன்பு எப்படியாகவேண்டுமென விளக்கினுர். (மத். 5 : 48 - 48) மலைப் பொழிவின் மையமும் சிறப்புமான பாகமாக இது அமைவதைக் காணலாம். தனியான தொடர்பில் காணப்படவேண்டிய கிறிஸ்தவ சீலத்தின் சாரம் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காணப்படாத சிறப்பாக இங்கு தரப் பட்டுள்ளது.

தம்மைப் பின்பற்றுவோரிடம் ஆண்டவர் எதிர்பார்க்கும் இயல்பு பகைக்கிறவரிடத்து அன்பு பாராட்டி அவர்களுக்காக வேண்டுதல் செய்வதென இங்கு குறிப்பிடப்படுகிறது. அன்பு எனும்போது நாம் கருதுவன எவை?

பிள்ளையினிடத்துப் பெற்றேருக்குள்ள ஒருவகை அன்பை நாமறிவோம். பிள்ளையும் தன்னைப் பிறப்பித்த தாயினிடம் வைக்கும் அன்பும் நாமறிந்ததே. குடும்ப பாசத்தை இது உணர்த்தும்.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையில் ஏற்படும் ஒரு அன்பும் உண்டு. பாலுணர்வாலேற்படும் காதலாக இது காணப்படும்.

நெருங்கிய தொடர்புள்ள நண்பர்கள் அருமையானவர்களுக்கிடையில் காணப்படும் பாசமும் அன்பெனப் படுகிறது. இது மேலான தன்மையுடையது.

ஆண்டவர் கருதும் அன்பு இவையனைத்திலும் மேலான இறையன்பு. நல்லார் மேலும் தீயார் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி மழையைப் பொழிவிக்கும் அன்பு. மற்றவர் நமக்கென்னசெய்கிருர் என்று பாராது, பதிற்செய்யாது பாராட்டும் அன்பு. அவர்மேல் எவ்வித கசப்புங்கொள்ளாது அவரிடத்துள்ள நன்மையைக் காணத் தூண்டும் அன்பு.

நம் அருமையானவர்களிடமும் நெருங்கியவர்களிடமும் பாராட்டும் அன்பை நம்மைப் பகைக்கிறவர்களிடமும் காட்ட வேண்டுமென்பதல்ல ஆண்டவர் கூறுவது. இது அதிலும் சிறப்பானதும் வேறுபட்டதுமாகும்.

வேறுபாடுதானென்ன? நமக்கருமையானவர்களை நாம் நினையாதிருக்க முடியாது. நாம் எதிர்பாராமலே அது நடந்து விடுகிறது. இதயத்தில் எழும் ஏதோ உணர்வால் உண்டாவது அது.

ஆனுல் பகைக்கிறவர்களைச் சிநேகிப்பது இதய உணர்வாலுண்டாவதல்ல அப்படிச் செய்ய வேண்டுமென நம்மனதில் கட்டாயமாகத் தீர்மானிப்பதால் ஏற்படுவது. இயற்கையாக நம்மிடம் ஏற்படும் ஏதோ ஒன்றை மேற்கொண்டு வெற்றிகாண்பதால் அது ஏற்படுகிறது. தவிர்க்க முடியாத ஒன்றுபல்ல, மனதில் உறுதியாகத் தீர்மானிக்க வேண்டிய ஒன்ருக அமைகிறது. அப்போது நம்மைப் பகைத்துத் தீமை செய்வோரையும் அன்புடன் அரவணைக்கும் இயல்பு தோன்றச் செய்வது நாம் விரும்பாதவர்களையும் நம்மை விரும்பாதவர்களையும் சினேகிக்க வல்லமை தரும் அன்பைப் பற்றித்தான் ஆண்டவர் இங்கு குறிப்பிட்டார். அதுவே தெய்வ அன்பு. கோபித்துக் கசக்கும் நம் இயல்பான தன்மையை மேற்கொள்ள ஆண்டவர் உதவும் போது மாத்திரமே இந்த அன்பு நம்மிடம் பிறக்க முடியும்.

இப்படி அன்பு பாராட்டுவதனுல் மற்றவர் தவறுகளை அப்படியே விட்டுவிடு என்பது கருத்தாகாது. பிள்ளை தவறு செய்யும்போது தண்டித்துத் தடுக்காத பெற்றூர் அப்பிள்ளையில் அன்பானவர்களென்று சொல்ல முடியாது. தவறு செய்வோரைத் தடுத்து திருத்தவேண்டும். கண்டிப்பதும் புத்தி சொல்வதும் அன்பின் செயல்களாகும். நம் விருப்பம் நிறைவேறவல்ல நாம் தண்டிப்பதோ கண்டிப்பதோ. அது அவரை நல்வழிப்படுத்தும் கிறிஸ்தவ கட்டுப்பாடாக வேண்டும்.

இந்த ஆலோசனையை ஒவ்வொருவரும் தத்தமக்குரியதாகக் கொள்ளவேண்டும். சண்டையிடலாகாது, பகைமை கூடாது எனச் சொல்லித் திரிவது இலகு. ஆனுல் நாம் சந்திக்கும் தனியான விஷயத்தில் இந்தப் பிரமாணத்தைக் கடைப்பிடிக்குமாறு கேட்கப் படுகிறேம்.

இந்தப் பிரமாணத்தை நிறைவேற்ற கிறிஸ்துவைத் தன்னுள் கொண்ட கிறிஸ்தவனுல் மாத்திரம் கூடும். கிறிஸ்துவினுலே நமக்கு இந்த வல்லமையைத் தரமுடியும். ஆண்டவர் நம் உளத்தில் கோயில் கொண்டருளினுலன்றி நம் உள்ளத்தில் தோன்றும் கசப்புகள் அழியா. மலைப்பொழிவின்படி வாழ்ந்தால் இச்சீவியம் பாழடையுமென்பர் சிலர். ஆனுல் ஆண்டவர் இடம் பெருவிடில் இது சாத்தியமாகாது. கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்ற நமக்கு கிறிஸ்துவின் ஒத்தாசை வேண்டும்.

இந்த அன்பு நம்மிடத்தோன்றும்போது மற்றவர் செய்வனவற்றையெல்லாம் பாராட்டாது போவதுபோல அவர்களுக்காக நாம் ஏதும் செய்யவேண்டியவர்களுமாவோம். அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுமாறு ஆண்டவர் கூறினுர். ஒருவன் மற்றவனைப் பகைத்துக்கொண்டே அவனுக்காக வேண்டிக்கொள்ள முடியாது. தான் பகைக்கக் கேட்டவனைச் சேர்த்துக்கொண்டே ஆண்டவன் சந்நிதிக்குப் போக வேண்டும். அப்போது ஏதோ ஒன்று ஆச்சரியமான முறையில் நடக்கக் காணலாம். கடவுள் சந்நிதியிலே மற்றவனைப் பகைத்துக்கொண்டே இருக்க முடியாது. ஆகவே நம் பகைமையைக் கொல்வதற்குச் சிறந்தவழி பகைக்கக் கேட்டவனுக்காக மன்ருடுவதாகும்.

இப்படி அன்பு கூரும்படியாக ஆண்டவர் கேட்பதேன்? இவ்வித அன்பு மனிதனிடம் தெய்வத் தன்மையை உண்டாக்குகிறது.

ஆண்டவர் தெய்வீகப் பிள்ளையைச் சுட்டிக் காட்டுகிருர். அது அற ஆர்வத்தால் பிறக்குஞ் செயல். நல்லார் மேலும், தீயார் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி, நீதிமான்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பொழியச் செய்யும் அன்பு கடவுளுடையது. கடவுள் யாவருக்கும் நல்லவராகவே இருக்கிருர். பாவிக்கும் பக்தனுக்கும் நன்மை செய்கிருர். "எல்லா உயிர்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறன. ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு உணவு கொடுக்கிறீர். நீர் உமது கையைத் திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்." என சங்கீதக்காரன் பாடினுர். (சங். 145 : 15, 16

விண்ணிலுள்ள நம் தந்தையின் மக்களாவதற்கு இவ்விதமாய் நாம் மற்றவர்களிடம் அன்பு பாராட்ட வேண்டுமென ஆண்டவர் கூறுகிறுர். அப்படிச் செய்வதனுல் நாம் யாவருமே கடவுள் தன்மையுடையவரும், கடவுளின் பிள்ளைகளுமாவோம் என்பது அவர் கருத்து.

அப்படிச் செய்யும்போது நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை உணர்ந்து நிறைவேற்ற ஆயத்தமான சற்குணராகப் பிதாவின் அன்பைத் தரிப்பவர்களாவோம். அவர் சாயலை வெளிக்காட்டுபவர்களாவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

21ST JUNE, 1968.

UNSEEMLY ANGER

The Minister of Education, Mr. I. M. R. A. Iriyagolle, according to reports appearing in the daily papers, indulged in very strong criticism of the professors in our Universities at a seminar of head - masters of the Anuradhapura district. He alleged that "it was those pundits, those so - called professors in the Universities who were directly responsible for the moral degeneration and the low disciplinary standards in the Universities". He went on to add: "There was not a single professor, lecturer or whoever they were called, who was capable of controlling 100 students in three out of the country's four Universities", and that "a head - master of a village school was thousand times better than University dons". However right - thinking people might resent such wild censure, they cannot be surprised at the Minister's ravings. They are quite in keeping with his attitude towards those who do not agree with him and with the faith he has in his omniscience of educational matters. He is also reported to have once again lost his temper badly at another seminar of head - masters held recently in Nuwara Eliya.

It does not worry Mr. Iriyagolle that a person in such a responsible position as his ought to avoid wild statements, which are almost a libel on a group of men belonging to a respectable profession. Has the Minister checked the state of affairs in the Universities to which he referred and felt convinced, as a result of his verifications, that the moral degeneration of university students can be directly imputed to the professors? We admit that of late the standards of discipline in our Universities have gone down and the teachers in them cannot absolve themselves altogether of their responsibility for such a fall in standards; but to ascribe the blame entirely to them is, to say the least, unfair. One wonders if such an unfair criticism does not smack of a desire for vengeance in the Minister, since it comes so soon after the strong protest made to him by some dons in the University of Ceylon, Peradeniya, against the Minister's choice of Civil Servants as the new Vice-Chancellors for our two premier universities. The protest was a well - reasoned, well - balanced, entirely dignified one in loud contrast with the undignified wrathful outbursts of Mr. Iriyagolle. If the Prime Minister does not bridle the raving tongue of the Minister soon, he would be causing great damage not only to his own Government but to the entire country.

O

THE PROVINCIAL SYNOD OF THE ROMAN CATHOLIC CHURCH

(BY THE RT. REV. S. KULANDRAN)

When travel to Colombo now is done chiefly by the day-train, the number of days required for keeping an engagement there involves the sacrifice of a good deal of time for any one who lives in Jaffna. Yet when I got an invitation to attend the meetings of the first Provincial Synod of the Roman Catholic Church in Ceylon early this month, I decided to be present for at least two days. I wanted to be there when history was being made.

It may, of course, be said that history had really been made in this respect in Rome at the 2nd Vatican Council some years ago. While that is certainly true, it may also be said that in a certain sense the 2nd Vatican merely opened the way for history being made; for, though it was the Vatican Council that changed the attitude of the Roman Church to the traditions of centuries, what mattered was how the new attitude was going to be carried into effect in her Provinces spread over the earth and constituting the Church as a whole.

What exactly was it that the Vatican had done? How had it altered the direction that the Roman Church had followed so long? It has been rightly said that the 2nd Vatican Council brought to an end the era of the Council of Trent.

The Council of Trent took place from 1545 to 1563. Martin Luther had put up his theses in 1517; but the Reformation itself may be said to have got under way in the decade following. A General Council had not taken place for a long time. The Council of Trent was convened to decide on what should be done in the face of such an open, flagrant and unexpected revolt on such a vast scale and how best to prevent the recurrence of such an event in the future. For a 100 years the champions of Rome fought the Protestants on many battle fields of Europe; and the Counter Reformation led to a missionary effort that reached the far corners of the earth and which has been maintained at fever pitch ever since. But what the Council of Trent did was fundamentally to put the Church of Rome on the defensive.

Organisationally the Council of Trent led to an extreme centralisation of administration. It was a joke at the time that the Bishops had gone to Trent as Bishops and had returned as parish priests. It was by such concentration of authority that the Roman Church could be sure that everything taking place in her far flung domain could be under her eye at every moment. Intellectually what the sudden outbreak of the Protestant movement did was to convince the authorities that further risks in the sphere could not be taken. In the old days there had been many schools of thought, controversies and clash of opinions; but these battles had been fought within the Church. There had been no schism, only a lot of ink spilt. In view of the Protestant breakaway, now all new theological ideas and intellectual movements became suspect; and the Church established a strict check on any trend that showed signs of leaving the beaten track. She began always to look back to the past; the response to the present and the future was made in strict conformity to patterns already laid down by Councils, Papal pronouncements and a clear-cut philosophy formulated in the thirteenth century. The Church which according to Augustine should be "semper reformanda" (always subject to reform) became a "semper eadem" (always the same). A Church which took up such an attitude to religious and theological movements was also bound to take up a similar attitude to all new movements of whatever kind in the world.

So for more than four centuries the Church of Rome stood unmoved and unmoving, while the tides of intellectual and political movements of the world swept round her, saying what had been said years and centuries ago. Her zeal never faltered; the dedication and the spirit of sacrifice shown by her servants astonished the world. She produced saints and martyrs all over the world; and the old charges of worldliness and luxury that had been rightly levelled against her in Europe of the Middle Ages became ridiculously irrelevant. But her opinions, attitudes and philosophy remained rigid and inflexible.

The 2nd Vatican Council deliberately decided that this era should come to an end and that the Roman Church's whole method of discharging her mission to the world should not merely be changed but reversed.

The first Provincial Synod of the Roman Church in Ceylon opened with a ceremony on the 1st June this year. The working sessions started on the 2nd in the hall of St. Aloysius Seminary at Borella and went on till the 10th; there were three sessions every day. There was a panel of 15 Chairmen, one of whom presided for the time-being. From 12-15 to 1-00 p. m. every day there was Mass for those who cared to attend. In all about 250 participants attended, including lay and clerical representatives from Dioceses, certain ex officio members and the Bishops (usually called the heirarchy) Among both the Diocesan representatives and ex-officio members there were quite a number of nuns present.

Nine draft documents had been put before the Synod, one being a general declaration and the others dealing with various topics and carrying a large number of recommendations. Full freedom of discussions was allowed. After the discussion on each subject, the Resolutions Committee submitted an amended version drawn up in the light of the suggestions made. This again was submitted for discussion; and the final draft in each case was left to the Resolutions Committee which would submit the documents to the heirarchy for action at its discretion.

Such a free, frank and open discussion was a pleasing surprise to one accustomed to the crudest type of Roman Catholicism prevailing in the Jaffna villages, where every thing connected with the priests, bishops and the actions of the Church in general has been considered taboo; and where the belief had been taught that any criticism or disparaging remark about them was an unforgivable sin.

On the whole, with a few exceptions, the clergy was adjusting itself to the changed situation only with an effort; the laity, however, were usually quite uninhibited. The Bishops had no special status in the meetings and were ordinary participants; but everyone was aware that they had a special status outside. They had, therefore, been made to sit apart lest their frequent interventions might throw cold water on the debate. Partly because of this tacit understanding and partly because the seating arrangement itself favoured the role of the spectators, most Bishops kept silent during discussions; only one Bishop besides the Cardinal usually spoke. But the Cardinal seemed to be equal to every occasion, plunged with zest into the rough and tumble of debate and usually came out none the worse.

The Mass was in English, except for a few Latin words at the end. It was con - celebrated, which means that those who officiated at the altar repeated the words at the same time. It is good for us who speak a good deal of our differences with Rome to realise how much of the Communion Service is the same among all Christians.

In what sense was history being made in Colombo and in all other places where similar Synods are being held? History was being made, in that the Church of Rome was coming out of the past into the present, out of its isolation into the busy world, into the market places, the forums and the crowded haunts where men transact their ordinary business, buy and sell, plan and devise for good or evil. She was coming out to face their problems and wrestle with them, to witness to the Truth she believes in and to find the answers to their problems in the light of that Truth, but along with the men and women of the world who were facing them.

The Roman Church is losing much by doing all this. She had been whispering not merely "the enchantments of the Middle Ages" but those of long centuries. There had been about her inflexible aloofness, a charm and an appeal that have fascinated some of the greatest minds of the world. Her indifference to the tumult and the shouting of succeeding generations had brought a sense of shame to many for having been too busy with the things of the passing day. The haunting melody and the language of her ritual had taken one centuries back to a time when most of what we now know as history had not existed. All that was being lost.

But what was being lost had been an artificial gain, which had been acquired through circumstances; it was the appeal of the romantic, the appeal to the poet and the antiquarian in all men. What she is gaining is of the essence of the Church. The Church of Jesus Christ must be among men, their questionings and their attempted answers, their doubts, fears and hopes. Here she must bear her witness; and it is here that the renewed Church of Rome is trying to be. And that is why [illegible] Colombo at her first Provincial Synod.

THE BURNING YOUTH

BY K. PARAMOTHAYAN

Karl Mannheim, the eminent sociologist, observes: "Although there always arise new generations ...., it depends on the nature of a given society whether it makes use of them, and it depends on the sociological structure of that very same society how it makes use of them. *Youth belongs to those latent resources which every society has at its disposal and on the mobilization of which its vitality depends.*"

Today we read of student unrest in France, England, Italy, India, Japan — in fact, in almost all countries. Ceylon too witnessed a near holocaust recently. Could it be that elders and older folk who wish to preserve their pious privileges are responsible for this world - wide phenomenon? The answer is, "Yes, to a great extent."

To take our own country — one can safely make a sweeping generalisation that almost all plums of office are jealously guarded by men invariably in their senility. I do not mean to suggest that the older generation has no role to play in contemporary society. No society can afford to discard them. But let us consider the problem thus: Martin Luther King became a world leader in his thirties and when he died, after having won the Nobel Peace Prize and shocked the world with his mature guidance, he was only thirty-nine. The simple question is, 'Is it possible in a country like Ceylon for one in his thirties to become a leader of men, or for that matter hold a responsible position like Chairman of a Corporation or Vice - Chancellor of a University?' The answer is a definite 'No' — the reason being that the older generation will simply not tolerate such a thing! Leave alone Leadership, Chairmanship and Vice-Chancellorship and consider a small body like the Y. M. C. A. Is it not a fact that the Y. M. C. A. is in reality the O. M. C. A., where men in their retirement fight for plums of office, leaving the youth to indulge in recreation in the name of Christianity? Ofcourse, I would welcome contradiction if I am wrong.

To put it plainly, I think the time has come for some of us to speak up for the youth. Not that they are saints, but where they go wrong, sometimes seriously wrong, we may ask ourselves whether it is not probably largely the fault of the elders, of the community at large. How many of us consider the fact that it is more difficult to grow up today than ever before? The present - day youth are living in a rapidly changing world and find themselves in the vortex of social changes unparallelled in human history. They cannot extricate themselves and grow into adulthood merely to satisfy the whims and fancies of garrulous old men who always speak of their own superiority — a superiority that is self - imposed. Growing up today demands ever - widening loyalties — it is not just enough to think in terms of one's family, community, village or town, even one's country. We now speak of one's responsibilities as a citizen of the world, to humanity in general. The demands are indeed far too many that only a few grow into adulthood without a sigh or murmur. The majority make themselves heard by numerous ways and they are often misunderstood.

Why is it that the elders feel upset or enraged when they hear natural noises? It is merely because these noises pose a threat to the traditional authority and privilege of the old. There is also an unconscious jealousy to which most of the older ones are prone. The young ones are beginning life in earnest, where many who have passed the threshold of youth themselves would like to be. An agitated enthusiast once defined the secondary education of girls in English Grammar Schools, as 'a conspiracy to prevent young women growing up' — an exaggeration no doubt, but with a grain of truth in it. When men and women in their retirement get into as many Committees and governing bodies as possible, it smacks of a deli[illegible] directed against [illegible]

To go to Karl Mannheim again: "It is not very difficult to guess which are those societies in which the prestige is with the old and in which the revitalizing forces of youth do not integrate into a movement but remain only a latent reserve. *Static societies rely mainly on the experience of the old .... In contrast, dynamic societies which want to make a new start will rely mainly on the co-operation of youth*". He goes on to call the youth "the predestined pioneer of any change in society ...... It must become the pioneering force in a militant democracy".

The burning youth is clamouring to be integrated. Will our nation respond?

Letters to the Editor

THE LATE FRANKLIN CLARK FRY

Sir,

Your readers may be interested to know of an incident in which the Rev. Franklin Fry, whose death you reported last week, played an unwitting part.

A meeting of the Central Committee of the World Council of Churches was going to take place at Lucknow in 1952. The meeting was to be opened by Mr. K. M. Munshi, then Governor of Uttar Pradesh Mr. Munshi had, of course, been known for years as a strong critic of Christian activities in India; yet etiquette had demanded that the Governor of the State should deliver the opening speech.

Before the meeting Mr. Munshi saw Dr. Franklin Fry in the crowd. He had known Dr. Fry closely for some time as the person who had been in charge of Relief Work, when there had been a big famine in North India a little while previously, and had come to respect and admire him for his tireless and self - sacrificing activities.

"What are you doing here, Dr. Fry?" asked the Governor, "Why, I am going to preside at this meeting," replied Dr. Fry. Mr. Munshi had come prepared to deliver stinging rebuke to Christians, for their disloyalty to the Indian nation in belonging to an alien faith and for trying to convert others to it. He wanted his opinions to be widely publicised and had, therefore, given advance copies of his speech to the Press.

If Dr. Fry was to preside, Mr. Munshi decided that his prepared speech would be quite out of place. So he threw his prepared text aside and plunged into a high encomium of the Christians and their self - sacrificing activities. Those who had not been at the meeting read the next day what they considered to be another expression of Mr. Munshi's well known views. Those who had been present on the previous evening and who read the papers in the morning put it down to the habitual disregard for truth displayed by newspapers.

Yours truly,
S. KULANDRAN,
Bishop.

O

REV. DR. MATHER REPLIES

Dear Sir,

I am disappointed and grieved that you published in your issue of the 14th inst., that article under the title "Rev. James Mather and the world". I shall write to you later, commenting on it, but before I do so, I make this request to you, that you would first publish in your paper the appeal I made in connection with the D. C. Bill, and of which your article is a criticism.

My Appeal appeared in the *Times of Ceylon* only, - on the 22nd May. I believe, many of your readers do not read the *Times*, — perhaps more than 80 percent don't, — but they have all read in your paper only the criticism of it. If you publish my Appeal, your readers will be able to judge for themselves how your article lacks truth or accuracy

Yours faithfully,
JAMES S. MATHER,

No. 5. Nimal Road,
Bambalapitiya.

Rev. Mather's Appeal in the Times of Ceylon.

The country is in great danger. This is an earnest appeal that the D. C. Bill be shelved until the country is in a better frame of mind.

I make this appeal though I myself had advocated the formation of District Councils on the ground that the privileges granted, if any, to the North applied equally to every part of Ceylon.

I make this appeal to our respected Prime Minister as well as to the F. P. and especially to its leaders Mr. S. J. V. Chelvanayakam, Dr. E. M. V. Naganathan, and Mr. A. Amirthalingam, for whom we people belonging to the North have the greatest respect and love because of their integrity, dependability, sincerity and nobility.

All over the South, there is much tension just now and much ill - feeling has been created by misrepresentations, and misunderstandings. Certainly, this is a most inappropriate time for Parliament to pass this Bill, even though there may be majority support,

A good deed done at the wrong time often turns into a great evil. Even seeds planted in a garden at the wrong season of the year fail to grow well.

It will be not only unstatesmanlike but also most damaging, and against the national unity we are working for to push this Bill through Parliament when the ground is hardened with wrong attitude and is poisoned with bad spirit.

Please put it aside for sometime. Give the people time to cool down and think calmly.

O

F. P. ITS OWN ENEMY

Dear Sir,

Isn't it possible for the F. P. to abandon its label and separationist policies at this stage? If it does, it will be delivering the death blow to Communalism and those who use it to further their own ends.

The bold and statesmanlike attitude of the Premier demands that the F. P. extends its hand of friendship to the Premier and the Sinhalese people who believe in the unity and progress of Mother Lanka,

Yours faithfully,
SON OF LANKA

Colombo.

IN MEMORIAM

Ever Remembered

FLORENCE PAKIARATNAM MATHER

(nee Curtis)

Departed: 29th June, 1963.

For your goodness and love,
"We are bound to thank God always for you"

— *II Thessalonians 1:3*

(By her loved ones)

No. 5 Nimal Road,
Bambalapitiya.

Printed and published for the American Ceylon Mission by Mr. Abraham Saravanamuthu Thambiratnam, residing at Manipay, at the American Ceylon Mission Press. Uduvil Road, Manipay, on Friday, 21st June 1968.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org